சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2014–15–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 1000 ஏழை, எளிய மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், ரூ.2.80 கோடியே செலவில் 5 பிற்படுத்தப்பட்டோர், 3 மிகப்பிற்படுத்தப்பட்டோர், 1 சீர்மரபினர் மற்றும் 1 சிறுபான்மையினர் விடுதி என மொத்தம் 10 கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1 (2))துறை

அரசாணை (நிலை) எண். 10 நாள்: 29.01.2015

திருவள்ளுவர் ஆண்டு 2046
ஜய, தை 15

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். பி4/1037/2014, நாள். 24.02.2014.

* * * * * *

ஆணை:

2014–15–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"2014–15–ஆம் ஆண்டில் ரூ.2.80 கோடி செலவில் 10 கல்லூரி விடுதிகள் துவங்கப்படும்".

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களின் நல்னுக்காக மொத்தம் 1305 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும், அவற்றில் பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் / ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 716 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 576 விடுதிகளும், சிறுபான்மையினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 13 விடுதிகளும் இயங்கி வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

3. புதிதாக துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10 இடங்களில் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை துவக்கி செவ்வனே செயல்பட 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட ஒவ்வொரு விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கோரியுள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |

4. மேலும், மேற்படி 10 விடுதிகள் துவங்குவதற்கான தொடரும் செலவினம் ரூ.1,36,56,740/–ம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.26,52,500/–ம் சேர்த்து மொத்தம் ரூ.1,63,09,240/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும், புதிதாக துவங்கப்படும் 10 விடுதிகளுக்கு ஒரு காப்பாளர் / காப்பாளினி, 2 சமையலர், ஒரு காவலர் / ஏவலர், ஒரு துப்புரவு பணியாளர் வீதம் மொத்தம் 10 காப்பாளர்/ காப்பாளினி பணியிடங்கள், 20 சமையலர் பணியிடங்கள், 10 காவலர் / ஏவலர் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் கால முறை ஊதியத்திலும், மேலும் 10 துப்புரவு பணியாளர் பணியிடங்களை தொகுப்பூதியத்திலும் தோற்றுவிக்க கோரியுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை நன்கு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, 10 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை (5 பிற்படுத்தப்பட்டோர், + 3 மிகப்பிற்படுத்தப்பட்டோர் + 1 சீர்மரபினர் + 1 சிறுபான்மையினர்) இணைப்பு I–ல் வைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடங்களில் புதிதாக துவங்கிடவும், இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.2,54,12,000/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) மற்றும் தொடரா செலவினம் ரூ.26,00,000/– (ரூபாய் இருபத்தாறு இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.2,80,12,000/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பது இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) முழுமையாக்கி ரூ.2,80,00,000/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே எண்பது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி அளித்தும், நடப்பாண்டில் (2014–15) தொடரும் செலவினத்திற்கு சம்பளமில்லா இனத்தில் 3 மாதங்களுக்கும் மற்றும் இணைப்பு II-ல் தரப்பட்டுள்ள தொடரா செலவினத்தையும் உள்ளடக்கிய ரூ.60,32,500/– (ரூபாய் அறுபது இலட்சத்து முப்பத்திரெண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், புதிதாக துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10 விடுதிகளுக்கு கீழ்கண்டவாறு 40 பணியிடங்களை தற்காலிக அடிப்படையில் காலமுறை ஊதியத்திலும், 10 பணியிடங்களை தொகுப்பூதிய அடிப்படையிலும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் நியமனம் செய்யப்படும் நாள் முதல் சம்பளம் மற்றும் இதரப் படிகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | 10 விடுதிகளுக்கு தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 10 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 20 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 10 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 10 |
| | மொத்தம் | | 50 |

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) <u>பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகள் – 5</u>

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

| சம்பள இனத்திற்கான கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் 2014–15–ஆம் நிதியாண்டில் (இரு மாதங்களுக்கு) ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-03-277-AA-0105) | ---- | ---- |
| 02 மருத்துவப்படி<br>(DPC 2225–03–277–AA-0123) | ---- | ---- |
| 06 வீட்டு வாடகைப்படி<br>(DPC 2225–03–277–AA-0169) | ---- | ---- |
| 03 அகவிலைப்படி<br>01 அகவிலைப்படி<br>(DPC 2225–03–277–AA-0310) | ---- | ---- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-AA-0552) | ---- | 2,00,000 |

| | | |
|---|---|---|
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (5X ரூ.15,000X3 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-AA-0614) | 2,25,000 | --- |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-AA-1917) | --- | 75,000 |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-AA-2407) | --- | 8,38,750 |
| 34 ஏனைய செலவுகள்,<br>01– ஏனைய இனங்கள்<br>(DPC 2225-03-277-AA-3415) | 1,12,500 | --- |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-AA-3425) | --- | 2,00,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-AA-6798) | 13,58,750 | --- |
| மொத்தம் | **16,96,250** | **13,13,750** |

(ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகள் – 3</u>

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

| சம்பள இனத்திற்கான கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் 2014–15–ஆம் நிதியாண்டில் (இரு மாதங்களுக்கு) ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-03-277-KA-0114) | --- | --- |
| 02 மருத்துவப்படி<br>(DPC 2225–03–277–KA-0123) | --- | --- |
| 06 வீட்டு வாடகைப்படி<br>(DPC 2225–03–277–KA-0169) | --- | --- |
| 03 அகவிலைப்படி<br>01 அகவிலைப்படி<br>(DPC 2225–03–277–KA-0310) | --- | --- |

| | | |
|---|---|---|
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-KA-0552) | --- | 1,20,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (3Xரூ.15,000X3 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-KA-0614) | 1,35,000 | --- |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-1917) | --- | 50,000 |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-KA-2407) | --- | 5,00,750 |
| 34 ஏனைய செலவுகள்<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-03-277-KA-3415) | 67,500 | --- |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-3424) | --- | 1,20,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-KA-6798) | 8,23,250 | --- |
| மொத்தம் | 10,25,750 | 7,90,750 |

**(iii) <u>சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதி – 1</u>**

"2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது–101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – AF – சீர்மரபினர் மாணவரில்லங்களும், உணவு இல்லங்களும்".

| சம்பள இனத்திற்கான கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் 2014–15–ஆம் நிதியாண்டில் (இரு மாதங்களுக்கு) ரூ. | தொடரா செலவினம் (ஓராண்டுக்கு உரியது) ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-80-101-AF-0112) | --- | --- |
| 02 மருத்துவப்படி<br>(DPC 2225-80-101-AF-0121) | --- | --- |
| 06 வீட்டு வாடகைப்படி<br>(DPC 2225-80-101-AF-0167) | --- | --- |

| | | |
|---|---|---|
| 03 அகவிலைப்படி<br>01 அகவிலைப்படி<br>(DPC 2225-80-101-AF-0318) | ---- | ---- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை) கலன்கள்<br>(DPC 2225--80 –101– AF– 0550) | ---- | 40,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (1X15,000X3)<br>(DPC 2225-101-AF-0612) | 45,000<br>(3 மாதங்களுக்கு) | ---- |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225--80 –101– AF – 2405) | ---- | 1,67,750 |
| 34 ஏனைய செலவுகள்<br>01– ஏனைய இனங்கள்<br>(DPC 2225--80 –101–AF – 3413) | 22,500<br>(3 மாதங்களுக்கு) | ---- |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225–80 –101– AF – 3422) | ---- | 40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225–80 –101– AF – 6796) | 2,87,750<br>(3 மாதங்களுக்கு) | ---- |
| மொத்தம் | 3,55,250 | 2,47,750 |

**(iv) சிறுபான்மையினர் கல்லூரி விடுதி – 1**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள்".

| சம்பள இனத்திற்கான கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் 2014–15–ஆம் நிதியாண்டில் இரு மாதங்களுக்கு ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-03-277-LA-0113) | ---- | ---- |
| 02 மருத்துவப்படி<br>(DPC 2225--03–277–LA-0122) | ---- | ---- |
| 06 வீட்டு வாடகைப்படி<br>(DPC 2225--03–277–LA-0168) | ---- | ---- |

| | | |
|---|---|---|
| 03 அகவிலைப்படி<br>01 அகவிலைப்படி<br>(DPC 2225–03–277–LA-0319) | --- | --- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-LA-0551) | --- | 40,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (1X15,000X3)<br>(DPC 2225-03-277-LA-0613) | 45,000 | --- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-LA-2406) | --- | 1,67,750 |
| 34 ஏனைய செலவுகள்<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-03-277-LA-3405) | 22,500 | --- |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-LA-3423) | --- | 40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-LA-6797) | 2,87,750 | --- |
| **மொத்தம்** | **3,55,250** | **2,47,750** |

**9.** மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I)த் துறையில் தனியே வெளியிடப்படும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டில் செலவு செய்யத் தேவையான முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு–செலவு பொது–I)த் துறைக்கு விண்ணப்பிக்கும்படி பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூடுதல் செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2014–2015–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளில் சேர்த்திட ஏதுவாக விளக்கக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–I) / (பி.மி.பி.)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**10.** இணைப்பில் கண்டுள்ள 10 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 5446/CMPC/2015, நாள். 29.01.2015—ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2333 (இரண்டாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை – 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை– 2.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை – 18 (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை – 18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்</u> :
நிதித் (பி.மி.பி/ வ.செ.பொது1/ வ.செ. பொது2) துறை, சென்னை – 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.

இணைப்பு – I

அரசாணை (நிலை) எண். 10, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிநே1(2))த் துறை, நாள். 29.01.2015–ன்படி 10 புதிய கல்லூரி விடுதிகள் துவங்குவதற்கான இறுதி பட்டியலின் விவரம்:

| வ.எண். | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 1. | திருவாரூர் | கல்லூரி மாணவியர் விடுதி, நன்னிலம். |
| 2. | கடலூர் | தொழிற்பயிற்சி மாணவியர் விடுதி, கடலூர். |
| 3. | தூத்துக்குடி | கல்லூரி மாணவர் விடுதி, கோவில்பட்டி. |
| 4. | திருநெல்வேலி | கல்லூரி மாணவியர் விடுதி, சங்கரன்கோவில். |
| 5. | இராமநாதபுரம் | கல்லூரி மாணவர் விடுதி, பரமக்குடி. |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 1. | பெரம்பலூர் | கல்லூரி மாணவியர் விடுதி, வேப்பூர். |
| 2. | விழுப்புரம் | கல்லூரி மாணவர் விடுதி, சங்கராபுரம் (பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி). |
| 3. | தருமபுரி | கல்லூரி மாணவியர் விடுதி, பாப்பிரெட்டிபட்டி. |
| சீர்மரபினர் நல விடுதி | | |
| 1. | சிவகங்கை | கல்லூரி மாணவர் விடுதி, காரைக்குடி. |
| சிறுபான்மையினர் நல விடுதி | | |
| 1. | வேலூர் | கல்லூரி மாணவர் விடுதி, ஆம்பூர். |

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

30/4/15

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – II

அரசாணை (நிலை) எண். 10, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை, நாள். 29.01.2015–ன்படி ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான அனுமதிக்கப்பட்ட செலவின விவரம் பின்வருமாறு:

| வ.எண். | பொருட்கள் | மாணவர் விடுதி செலவினம் ரூ. | மாணவியர் விடுதி செலவினம் ரூ. |
|---|---|---|---|
| 1. | எரிவாயு இணைப்பு | 30,000 | 30,000 |
| 2. | நூலக வசதி | 30,000 | 30,000 |
| 3. | பாத்திரங்கள் | 30,000 | 30,000 |
| 4. | மரச்சாமன்கள் | 30,000 | 30,000 |
| 5. | அரவை இயந்திரம் | 12,500 | 12,500 |
| 6. | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 | 11,000 |
| 7. | இன்வர்ட்டர் | 15,000 | 15,000 |
| 8. | விளையாட்டுகருவிகள் | 5,000 | 5,000 |
| 9. | பாய் (ரூ.100 X 60) | 6,000 | 6,000 |
| 10. | பெட்ஷீட் (100 X ரூ.250) | 25,000 | 25,000 |
| 11. | பாடக்குறிப்பு புத்தகம் | 10,000 | 10,000 |
| 12. | தட்டு மற்றும் டம்ளர் (100 X ரூ.75) | 7,500 | 7,500 |
| 13. | முதலுதவி பெட்டி | 650 | 650 |
| 14. | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 6,000 | 6,000 |
| 15. | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 | 5,100 |
| 16. | புத்தக அலமாரி | 10,000 | 10,000 |
| 17. | மின் அரைப்பான் | 6,000 | 6,000 |
| 18. | இட்லி வேகவைப்பான் | 8,000 | 8,000 |
| 19. | சுகாதார குட்டை தகளி | ----- | 25,000 |
| | மொத்தம் | 2,47,750 | 2,72,250 |

5 மாணவர் விடுதிக்கான தொடரா செலவினம் = ரூ.12,38,750/– (2,47,750 X 5 = 12,38,750/–)

5 மாணவியர் விடுதிக்கான தொடரா செலவினம் = ரூ.13,61,250/– (2,72,250 X 5 = 13,61,250/–)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.